# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 127** **தேதி:03.02.2019**

**சென்னை தமிழ் மாநில செயற்குழு முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் அவசர தமிழ் மாநில செயற்குழு சென்னை கிண்டியில் உள்ள CITU சங்க அலுவலக கட்டிடத்தில் 01.02.2019 அன்று தமிழ் மாநில உதவி தலைவர் தோழர் S.தமிழ்மணி தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் மாநில சங்கத்தின் உதவி பொருளாளர் தோழர் G.சுந்தர்ராஜ் அஞ்சலி தீர்மானம் முன்மொழிய, மாநில செயற்குழு தியாகிகளுக்கு தனது அஞ்சலியை உரித்தக்கியது. தோழர் P.ரிச்சர்ட் COS வந்திருந்த அனைவரையும் வரவேற்ற பின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆய்படு பொருட்களின் மீது தான் முன்வைத்திருந்த அறிக்கையினை அறிமுகம் செய்து உரை நிகழ்த்தினார்.

பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் AGS தோழர் S.செல்லப்பா அவர்கள் தனது துவக்க உரையில், டிசம்பர் 3ல் நடைபெற இருந்த கால வரையற்ற வேலைநிறுத்தம் ஒத்தி வைக்கப் பட்டதின் பின்னணி, கோரிக்கைகளின் இன்றைய நிலை மற்றும் எதிர் வர உள்ள பிப்ரவரி 18 முதல் நடைபெற உள்ள மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்டவைகளோடு, BSNLல் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

இந்த மாநில செயற்குழுவை BSNLWWCC மாநில அமைப்பாளர் தோழர் பெர்லின் ஆலீஸ் மேரி அவர்களும், அகில இந்திய அமைப்பாளர் தோழர் P.இந்திரா அவர்களும், TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த மாநில செயற்குழுவில் வந்திருந்த தோழர்களில் 18 தோழர்கள் மாநில செயலாளர் முன்வைத்த அறிக்கையின் மீது தங்களின் கருத்துக்களை எடுத்துரைத்த பின்னர், கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன:-

01. BSNL ஊழியர்களுக்கு 15% ஊதிய நிர்ணய பலனுடன் கூடிய ஊதியமாற்றம், ஓய்வூதிய மாற்றம், BSNLக்கு 4G அலைக்கற்றை ஒதுக்கீடு உள்ளிட்ட பிரச்சனைகளுக்காக AUAB அறைகூவல் விட்டுள்ள 18.02.2019 முதல் நடைபெற உள்ள மூன்று நாட்கள் வேலை நிறுத்த போராட்டத்தை தமிழகத்தில் அனைத்து சங்கங்களையும் ஒன்று திரட்டி வெற்றிகரமாக நடத்துவது.

02. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், விரிவடைந்த மாவட்ட செயற்குழுக்களை (சாத்தியப்பட்ட இடங்களில் AUABயில் உள்ள அனைத்து சங்கங்களின் இணைந்த மாவட்ட செயற்குழுக்களை) பிப்ரவரி 4 முதல் 8ஆம் தேதிக்குள் நடத்துவது.

03. தமிழ் மாநில AUABவிடும் அறைகூவலுக்கு ஏற்ப அனைத்து மாவட்டங்களிலும், AUAB சார்பாக மாநில தலைவர்கள் பங்கேற்கும் சிறப்புக் கூட்டங்களை நடத்துவது.

04. சென்னை மற்றும் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் பத்திரிக்கையாளர் சந்திப்பினை வெற்றிகரமாக நடத்துவது.

05. மாநில, மாவட்ட, கிளை சங்க நிர்வாகிகள் அனைத்து ஊழியர்களையும் அதிகாரிகளையும் நேரில் சந்தித்து கோரிக்கைகளை விளக்கி இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும்.

06. ஜனவரி 08 மற்றும் 09 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் வெற்றிகரமாக பங்கேற்ற தோழர்களுக்கு தமிழ் மாநில செயற்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. குறிப்பாக 80%க்கும் மேலான ஊழியர்களை பங்கேற்க செய்த நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்ட சங்கங்களுக்கு சிறப்பு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

07. டிசம்பர் 17 முதல் 20 வரை BSNL ஊழியர் சங்கத்தின் 9வது அகில இந்திய மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திய கர்நாடக மாநில சங்கத்திற்கு தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டது.

08. அந்த அகில இந்திய மாநாட்டில், தொழிற்சங்கங்களின் ஒற்றுமையை பாதுகாக்கக் கூடிய வகையில், அங்கீகார தேர்தலில் முதல் சங்கம் 50% வாக்குகளை பெற்றாலும், இரண்டாவது வரும் சங்கங்களுக்கும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று தீர்மானத்தை முன்மொழிந்த மத்திய சங்கத்திற்கும், அதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட அனைத்து மாநில சார்பாளர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த மாநாட்டில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கும், குறிப்பாக தமிழகத்தில் இருந்து மீண்டும் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் P.அபிமன்யு மற்றும் AGS ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் S.செல்லப்பா அவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

09. 2018 அக்டோபார் 1, மற்றும் 2 தேதிகளில் சிறப்பாக நடைபெற்ற TNTCWU மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தோழர் M.முருகையா, செயலாளர் தோழர் C.வினோத்குமார், பொருளாளர் தோழர் பிரதீபா உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

10. மாவட்டங்களில் கிளை சங்கங்கள், கிளை செயலாளரின் முகவரி, உறுப்பினர் எண்ணிக்கை, கடைசியாக கிளை மாநாடு நடைபெற்ற தேதி ஆகிய விவரங்களை அனுப்பாத மாவட்டங்கள் விரைவில் மாநில சங்கத்திற்கு அனுப்புவது.

11. BSNL ஊழியர் சங்க 9வது தமிழ் மாநில மாநாட்டை வருகிற ஜூன் மாத இறுதி அல்லது ஜூலை மாத துவக்கத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் நடத்துவது என்றும் மே மாத இறுதிக்குள் மீதமுள்ள அனைத்து மாவட்டங்களின் மாநாடுகளையும் நடத்தி முடிக்க வேண்டும் என்றும் இந்த மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

12. கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு உறுதியான போராட்டங்களை நடத்தி தீர்வு காண்பது என்றும் மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

13. ஒப்பந்த ஊழியர்களுக்கு பல மாதங்களாக ஊதியம் வராதது உள்ளிட்ட பிரச்சனைகளுக்காக TNTCWU தமிழ் மாநில சங்கம் எடுத்துள்ள போராட்ட முடிவுகளை அமலாக்கம் செய்வதற்கு TNTCWU மாவட்ட சங்கங்களுக்கு வழிகாட்டுவதுடன் நமது மாவட்ட/ மாநில சங்க நிர்வாகிகள் முன்னிலையில் நின்று செயல்பட வேண்டும் என்றும், அந்த போராட்டங்களில் நிரந்தர ஊழியர்களையும் பெருமளவில் திரட்ட வேண்டும் என்றும் இந்த மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14. தமிழ் மாநில சங்கத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை கணக்கில் கொண்டு ஒவ்வொரு உறுப்பினர்களிடம் இருந்தும் தலா ரூ200/-, மாநில சங்க வளர்ச்சி நிதியாக பெற்று தமிழ் மாநில சங்கத்திற்கு மார்ச் 15க்குள் அனுப்பி வைப்பது என்றும் இந்த மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

15. இந்த மாநில செயற்குழுவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கிய CGM(P) மாவட்ட செயலாளர் தோழர் S.K.புருஷோத்தம் அவர்களுக்கு இந்த மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த மாநில செயற்குழுவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் தமிழ் மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் நன்றி கூறி இந்த மாநில செயற்குழுவை முடித்து வைத்தார்.

இந்த மாநில செயற்குவின் முடிவுகளை முழுமையாக நாம் அமல்டுத்துவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநில செயலாளர்